நல்லூர் பிரதேச நூலகம்
மாநகர
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 13 சனிக்கிழமை (29 08 1992) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 275

வெற்றிலைக்கேணி - சின்னமண்டலாயில்

# இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் புகுந்து புலிகள் தாக்கு!

## 9 காவலரண்கள் வீழ்ந்தன; 10 படையினர் பலி; ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 29

வெற்றிலைக்கேணிக்கும் ஆனையிறவுக்கும் இடைப்பட்ட சின்ன மண்டலாய் என்ற தரவைப் பகுதியில் அமைந்திருந்த இராணுவ காவலரண்கள் மீது நேற்று அதிகாலை 1.20 மணியளவில் விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்தத் திடீர் தாக்குதலின்போது அங்கிருந்த ஒன்பது காவலரண்களும் புலிகளிடம் வீழ்ந்தன. ஸ்ரீலங்காப் படையினர் தரப்பில் பத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மற்றும் பலர் காயமடைந்தனர். ஏராளமான ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளபாடங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

வெற்றிலைக்கேணி முகாமையும், ஆனையிறவு முகாமையும் இணைக்கும் வகையில் இராணுவத்தினர் அமைத்திருந்த— "இராணுவ வேலியை" உடைத்து ஊடறுத்துச் சென்ற புலி வீரர்களே இந்த சாதனையை நிலைநாட்டினர்.

பத்து நிமிட நேரத் தாக்குதலில் ஒன்பது காவலரண்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## அள்ளப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 29

வெற்றிலைக்கேணி — சின்னமண்டலாய்ப் பகுதியில் ஸ்ரீ லங்கா இராணுவத்தினரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ ஆர். பி ஜி. | — | 01 |
| ★ ஆர். பி. ஜி. ஷெல்கள் | — | 05 |
| ★ ஆர். பி. ஜி. புரொப்ளர் | — | 05 |
| ★ 203 பிஸ்டல் | — | 01 |
| ★ 203 ஷெல்கள் | — | 06 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி. | — | 02 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி. ரம் மகஸின் | — | 02 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி. கோல்சர் | — | 02 |
| ★ ரி 56 - 2 ரகத் துப்பாக்கி | — | 03 |
| ★ ரி 56 மகஸின் | — | 23 |
| ★ ரி 56 கோல்சர் | — | 08 |
| ★ ரி 56 ரகத் துப்பாக்கி | — | 02 |
| ★ ரி 81 - 1 ரகத் துப்பாக்கி | — | 02 |
| ★ ரி 81 - 1 மகஸின் | — | 07 |
| ★ பிறவுணிங் பிஸ்டல் | — | 01 |
| ★ பிறவுணிங் மகஸின் | — | 02 |

[2 ஆம் பக்கம் பார்க்க]

## உயர்தர விசேட பரீட்சை பெறுபேறுகள் குடாநாட்டில் மிகவும் வீழ்ச்சி கண்டன

கடந்த ஏப்ரலில் நடத்தப்பட்ட 1991 ஆம் ஆண்டுக்கான ஜி. சீ. ஈ. [விசேட] உயர்தரப் பரீட்சை முடிவுகள் யாழ்ப்பாணத்தில் நேற்று வெளியாகின.

மாணவர்கள் பரீட்சையில் பெற்ற பெறுபேறுகள் மிகவும் அதம நிலையில் இருந்தன. நகரப் பாடசாலைகள் பலவற்றிலும் மிகக் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களே திறமையான பெறுபேறுகளைப் பெற்றிருந்தனர்.

வழமையை விட கிராமப் பகுதிப் பாடசாலைகளின் மாணவர்களின் பெறுபேறு உயர்ந்து காணப்பட்டதாகக் கல்விமான்கள் தெரிவித்தனர்.

இம்முறை பரீட்சைப் பெறுபேறுகள் பொதுவாக வீழ்ச்சியுற்றது குறித்து பலரும் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை — பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் நேற்றே தபாலில் சேர்க்கப்பட்டதாகவும் யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

நேற்று வெளியான முடிவு

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தக்கம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம். ஆக. 29

மாதகலில் நேற்று முன்தினம் நடந்த மோதலில் வீரமரணமடைந்த லெப். கேர்ணல் இராஜனுக்கும் மற்றும் எட்டு போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில் குடாநாட்டில் நேற்று தக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

குடாநாட்டின் பலபகுதிகளி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வேலணை - பண்டத்தரிப்பு:

## தனியாரின் பெறுபேறுகள் கோட்ட அலுவலகங்களில்

யாழ்ப்பாணம், ஆக. 29

நேற்று வெளியான ஜி சீ ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளில் வேலணை, பண்டத்தரிப்பு ஆகிய இரு கோட்டக் கல்விப் பிரிவுகளைச் சேர்ந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் தபாலில் சேர்க்கப்படவில்லை என்றும், அவை அந்தந்தக் கோட்ட அலுவலகங்கள் மூலம் உரியவர்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும் யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

இந்த இரு கோட்டக் கல்விப் பிரதேசங்களைச் சேர்ந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகள் யாழ் கோயில் வீதியில் தற்காலிகமாக இயங்கும் வேலணைக் கோட்ட கல்வி அலுவலகத்திலும், மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தற்காலிகமாக இயங்கும் பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலகத்திலும் தங்கள் விடை

[2 ஆம் பக்கம் பார்க்க]

## காவல்துறையினர் நன்றி

யாழ்ப்பாணம், ஆக. 29

நல்லூர்க் கந்தன் மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று நிறைவேறியதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் தமிழீழ காவல் துறை நன்றி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழீழ காவல் துறை பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அந்த அறிக்கை வருமாறு:-

தமிழீழப் போராட்ட சூழ்நிலையில் யாழ். குடாநாட்டில் யுத்த மேகங்கள் சூழ்ந்திருக்கும் இவ்வேளையில், வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தனின் மகோற்சவ விழா சிறப்புடன் நடைபெற்று நிறைவேறியுள்ளது.

நல்லூர்க் கந்தன் ஆலய மகோற்சவ காலத்தில் முதன் முதலாக தமிழீழக் காவல் துறையின் உற்சவ காலப் பணிமனை ஒன்றை அமைத்தது மூலம் லட்சோப லட்சம் அடியார்கள், பக்தர்கள் அனைவருக்கும் பணி செய்யும் அரிய வாய்ப்பை இம்முறை பெற்றுள்ளோம்.

[5 ஆம் பக்கம் பார்க்க]

## ஷெல் தாக்குதலில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 29

கட்டுவன் பகுதியில் நிலைகொண்டுள்ள ஸ்ரீ லங்காப் படையினர் நேற்றுக் காலை நடத்திய ஷெல் தாக்குதலில் மாத்தனையில் இருவர் காயமடைந்தனர்.

மாத்தனையில் இருந்து இடம்பெயர்ந்து உடுவிலில் வசித்து வரும் நாகலிங்கம் சுந்தரலிங்கம் [57 வயது], நடராசா உமாகரன் [வயது 23] ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

மாத்தனையிலுள்ள தமது வைரவர் ஆலயத்திற்கு பொங்கச் சென்ற சமயம் இவர்கள் தாக்குதலுக்கு இலக்காகினர் என்று தெரிவிக்கப்பட்டது

காயமடைந்த இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். [ஒ-15]

## 2 விமான விபத்துக்களில் 87 பேர் பலி!

லண்டன், ஆக, 29

ரஷ்யா மற்றும் எல்சல்வடோர் ஆகிய நாடுகளில் நேற்று இடம்பெற்ற இரண்டு விமானவிபத்துக்களில் மொத்தம் 87 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவில் இவானோ என்னும் இடத்தில் ஏரோபுளோட் [illegible]

[2 ஆம் பக்கம் பார்க்க]

## ஹெலி வேட்டு

யாழ்ப்பாணம், ஆக. 29

இன்று அதிகாலை 2 மணியளவில் மண்டைதீவு, குருநகர் கடற் பிரதேசத்தில் வட்ட மிட்ட ஹெலி ஒன்று 50 கலிபர் தாக்குதலை பரவலாக நடத்தியது. [இ-3]

## நால்வர் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 29

சின்னமண்டலாயில் இடம்பெற்ற தாக்குதலின்போது விடுதலைப் புலி வீரர்கள் நால்வர் வீரமரணம் அடைந்தனர். அவர்கள் விபரம் வருமாறு:-

★ கப்டன் இதயன் [பிரான்சிஸ் ஜேசுநேசன் - மன்னார்]

★ லெப்டினன்ட் மதிறவாணன் [கதிர்காமவேலன் சிறிசாந்தன் - மீசாலை வடக்கு]

★ லெப்டினன்ட் தொல்காப்பியன் [சுப்பிரமணியம் வசந்த ரூபன் - நீர்வேலி]

★ வீரவேங்கை சோமகன் [மாணிக்கம் ஞானசேகரம் - சாவகச்சேரி] (ஒ)

## போராளிகளின் உருவப்பட ஊர்தி இன்று பவனி

யாழ்ப்பாணம், ஆக. 29

மாதகலில் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலில் வீரமரணமடைந்த லெப். கேர்ணல் ராஜன் மற்றும் எட்டுப் போராளிகளின் உருவப்படங்கள் தாங்கிய ஊர்தி குடாநாடெங்கும் மக்கள் அஞ்சலிக்காக இன்று பவனி வரவிருக்கிறது.

விசேடமாக அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் வரும் மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மக்கள் இல்லங்களின் முன்பாக ஈகச்சுடர்களை ஏற்றியும், மலர்களைத் தூவியும் அஞ்சலி செலுத்துவர்.

பிற்பகல் 3மணிக்கு இவ்

[6 ஆம் பக்கம் பார்க்க]

**குளமின்றிப் போனால்-நாடு வளமின்றிப் போகும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளுக்கு உதவுமாறு அரச அதிபர் கோரிக்கை

## நேற்று முகாம்களுக்கு விஜயம்

யாழ்ப்பாணம், ஆக. 29

வலி. வடக்கு மற்றும் வலி. மேற்குப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு மிக அவசரமாகத் தேவைப்படும் உடைகளையும் பிறபொருள்களையும் சேகரித்து வழங்குமாறு யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பொது அமைப்புக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அகதிகள் தங்கியுள்ள முகாம்களுக்கு விஜயம் செய்த பின்னர் அவர் விடுத்த பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் இந்தக்கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

லயன்ஸ் கழகம், சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் இன்ரறக்ட் கழகங்கள் போன்ற அமைப்புகள் பொது மக்களிடமிருந்து இவற்றைச் சேகரித்து வழங்கவேண்டும் என்றும் அரசாங்க அதிபர் கோரி உள்ளார்.

யாழ். அரச அதிபர், மற்றும் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதித் திட்டப் பணிப்பாளர் திரு. என். பத்மநாதன் யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. து வைத்திலிங்கம் ஆகியோர் நேற்று இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்களுக்கு விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

சங்கானை, உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள முகாம்களுக்கு நேரடியாகச் சென்று மக்களின் பிரச்சினைகளை அவர்கள் கேட்டறிந்தனர்.

இதேவேளை யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர், யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரும் நேற்று இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள பகுதிகளைச் சென்று பார்வையிட்டனர். (இ-5)

## வவுனியா நகரப் பகுதியில் 30 தமிழ் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஆக. 29

வவுனியா நகரப்பகுதியில் கடந்த நான்கு நாட்களில் 30 தமிழ் இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்ப் பயணிகள் மீது படையினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-3)

## அள்ளப்பட்ட...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| ★ நடுத்தர ரவைகள் | — | 6,650 |
| ★ நடுத்தர ரவைகள் லிங்குடன் | — | 770 |
| ★ நேற்றோ ரவைகள் | — | 1,760 |
| ★ 9. எம். எம். ரவை | — | 16 |
| ★ 5. 56 ரவை லிங்குடன் | — | 22 |
| ★ கிரனேட் | — | 25 |
| ★ சிக்னல் குண்டு | — | 01 |
| ★ பராலைட் | — | 02 |
| ★ தொலைநோக்குக் கண்ணாடி | — | 01 |
| ★ ஹெல்மட் | — | 08 |
| ★ மிகளி பெல்ட் | — | 19 |
| ★ மில்லி சப்பாத்து | — | 25 சோடி |
| ★ மில்ரி பாக் | — | 16 |
| ★ கொம்பாஸ் | — | 01 |
| ★ தண்ணீர்க் கான் | — | 25 |
| ★ தண்ணீர்க்கான் கோல்சர் | — | 14 |

(ஒ-3)

## வளர்ந்தோர் கல்வி
## ஆங்கிலப் பயிற்சி நெறி

யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் மேற்படி பயிற்சி வகுப்பு வழமைபோல் இன்று (29-08-1992) முதல் நடைபெறும். தயவு செய்து சமுகம் தரவும்.

— அதிபர்.

[கி-2500]

## ஆசிரியர் பயிற்சிக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், ஆக. 29

1993ஆம் ஆண்டில் ஆசிரியர் பயிற்சி பெறுவதற்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

31-12-1991க்கு முன்னர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள் மட்டுமே இதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி 30-9-92 ஆகும்.

இது பற்றிய விவரங்கள் 21-8-92ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியாகி உள்ளன. (அ)

## விற்பனை முகவர் தேவை

தைக்கப்பட்ட ஆடைகளை விற்பனை செய்யவும், ஆடைகள் தைத்துக் கொடுக்க ஓடர்கள் எடுக்கவும், அனுபவமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் 45 வயதுக்குட்பட்டவராகவும், கணக்குகள் பேணுவதில் அனுபவமும், அறிவும் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் கீழ் உள்ள முகவரிக்கு 15-09-1992 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்,**
யாழ். மாவட்டச் செயலகம்,
கோண்டாவில்.

[கி-3098]

## 2 விமான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளானதில் அந்த விமானத்தில் இருந்த 5 சிப்பந்திகள் உட்பட 77 பேர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

எல்சல்வடோர் நாட்டில் இடம்பெற்ற மற்றுமொரு விமான விபத்தில் 10 பயணிகள் கொல்லப்பட்டனர்.

## பாடசாலை பஸ் சேவை

எம். ஆர். கே. எஸ். ஸ்தாபனத்தார் தென்மராட்சி பாடசாலை மாணவர்களின் நலன்கருதி 01-09-92 முதல் யாழ். நகரிலுள்ள அனைத்து பாடசாலைகளுக்குமான விசேட பஸ் சேவையை நடாத்தவுள்ளனர்.

★ ஒரு குடும்பத்திலிருந்து இரண்டுக்கு மேற்பட்ட மாணவர்கள் பிரயாணம் செய்தால் விசேட சலுகைகள் வழங்கப்படும்.
★ மாதாந்த கட்டண அடிப்படையில் நடைபெறும்.
★ சென்று வருவதற்கான கட்டண விவரம்:

12 வயதிற்கு குறைந்தவர்களுக்கு ரூபா 20 00
12 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ரூபா 25 00

மேலதிக தொடர்பு:-

மினிபஸ் ஒன்றியம்,
பஸ் நிலையம்,
சாவகச்சேரி.

[C/3091]

## தனியாரின்,..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாள அட்டைகளைச் சமர்ப்பித்து பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஏனைய தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் நேற்றே தபாலில் சேர்க்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-5]

அம்மன் துணை

ஏழாலை தெற்கு களபாவோடை
வசந்தபுரம்

## திருமணத் திருவிழா

நாளை [30-08-92] ஞாயிறு காலை 7 மணி முதல் 9 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

செல்வன்
**நித்தியானந்தன் அவர்களுக்கும்**
செல்வி
**வசந்தகுமாரி அவர்களுக்கும்**

இறையருள் ஏற்பாட்டில் திருவருள் சித்தத்தின்படி, ஏழாலை களபாவோடை வசந்தநாகபூஷணி ஆலயத்தில் திருக்கல்யாணம் நடைபெறவுள்ளது என்பதை தொண்டர்கள், அடியார்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

மணமக்களை ஆசீர்வதித்து ஆசியுரை வழங்குவோர்:-

நல்லை ஆதீன முதல்வர்.
கானசுதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா.
செல்வி புஷ்பா செல்வநாயகம்.

வசந்த நாகபூஷணி ஆலயம், — தொண்டர்கள்
களபாவோடை.
ஏழாலை.

(தனிப்பட்ட அழைப்புகள் இல்லை)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஆங்கிரச வருஷம் ஆவணி மாதம் 15ஆம் நாள் (31-08-1992) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணிமுதல் 11-00 மணி வரை வரும் விருச்சிகலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எங்கள் புத்திரன் திருநிறை செல்வன் | எங்கள் புத்திரி திருநிறை செல்வி |
| **மோகனதாஸ் (B. Sc.)** | **மஞ்சுளா** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |
| [ஆசிரியர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை] | [ஆசிரியை, றோ. க. த. க. பாடசாலை, நீர்வேலி] |

வேளைமுகத்து விநாயகன் துணைகொண்டு நீர்வேலி கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் இனிது நிகழவிருக்கும் திருமாங்கல்யதாரண வைபவத்திற்கு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி இராசரத்தினம்
முள்ளானை, இளவாலை.

திரு. திருமதி இராசதுரை
நீர்வேலி மத்தி, நீர்வேலி.

தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை. (22335)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 07 — 09 — 1930
உதிர்வு: 29 — 07 — 1992

**திருமதி மாக்கிறட் ராணி சின்னராசா**

எனை மண்ணிற் சுமந்த மரகதமே!
அம்மா உனை இழந்து சிறகொடிந்த
பறவை நான்.

அன்பு மகன்
சூரியா

என் சுமை தீர்த்து ஆறுதல் ஈந்த குவிளக்கே
ஆறுதல் வார்த்தை சொல்ல ஆள் நட்பு இல்லையே

உன் பிரிவால் வாடும்
அன்புக் கணவன்
சின்னராசா

554, கடற்கரை வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

[22348]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச நூலகம்
மாநகர சபை
யாழ்ப்பாணம்

★ இந்தியாவில்

# தமிழ் நாட்டுக்கு வெளியே புலிகள்தளம் அமைக்கலாம்!

## உள்துறை அமைச்சர் சவான் எச்சரிக்கை

கொழும்பு, ஆக. 29

இந்தியாவில் தமிழ் நாட்டுக்கு அப்பால் உள்ள பிராந்தியங்களில் விடுதலைப் புலிகள் தளம் அமைக்கலாம்

மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் இவ்வாறு தெரிவித்தார்.

"தமிழ்நாடு அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையைத் தளர்த்தி விட்டது என்றும், விடுதலைப் புலிகளோடு ஓர் உடன்பாட்டுக்கு ஜெயலலிதா அரசு வந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை.

தமிழ்நாடு அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே இப்போதும் செயற்படுகின்றது.

எனவே விடுதலைப் புலிகள் தமிழகத்துக்கு வெளியே தளங்களை அமைக்க முனைகின்றார்கள்.

பல்வேறு பெயர்களில் கோவாவிலும், கர்நாடகாவிலும் நிலங்களை விடுதலைப் புலிகள் வாங்கி வருகின்றார்கள்.

விடுதலைப் புலிகள் ஏற்கனவே பெங்களூரில் இருக்கின்றனர். தமிழர்கள் பலர் அங்கிருப்பதாலேயே அவர்களோடு சேர்ந்து வாழ்வதன் மூலம் மறைந்திருக்கலாம் என்று புலிகள் நம்புகின்றார்கள்."

—இவ்வாறு திரு. சவான் கோவாவில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். [உ-எ]

# அணிசேரா நாடுகள் மாநாடு முதலாம் திகதி ஆரம்பம்

## பிரதமர் தலைமையில் குழு பயணம்

கொழும்பு, ஆக. 28

இந்தோனேஷியா தலைநகர் ஜகார்த்தாவில் அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள 10 ஆவது அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளும் ஆறு உறுப்பினர்கள் கொண்ட இலங்கைக் குழுவுக்கு பிரதமர் டி. பி. விஜேதுங்கா தலைமை வகிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

செப்டம்பர் முதலாம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை நடைபெறும் இம் மாநாட்டில் 106 க்கு அதிகமான நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் மொரிஷியஸ், இலங்கை இனப் பிரச்சினை குறித்து விவாதிக்கும் என ஏற்கனவே செய்தி வெளியாகி இருந்தது தெரிந்ததே.

அணிசேரா நாடுகள் இயக்கத்தின் தலைமைப் பதவியை அடுத்த மூன்றாண்டுகளுக்கு இந்தோனேஷியா ஏற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. [ஒ-எ]

## பட்டமளிப்பு

குருநகர், ஆக. 29

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாக வரத நாராயணர் தேவஸ்தான மஹோற்சவ காலங்களில் திருமுறைச் சொற்பொழிவு நிகழ்த்திய சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்திற்கு ஆலயப் பரிபாலகர் அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் 'திருமுறைச் செல்வன்' என்னும் பட்டத்தை அளித்து அவரை கௌரவித்தார். [த-51]

# அரசியல் தீர்வு இல்லையேல் எதிர்காலம் சூனியமாகும்!

## அமைச்சர் ஹமீத் எச்சரிக்கிறார்

கொழும்பு, ஆக. 29

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு இல்லையேல் எதிர்காலம் சூனியமாகிவிடும்.

உயர்கல்வி மற்றும் நீதித்துறை அமைச்சர் சாஹுல் ஹமீத் இவ்வாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தேசிய இணக்கத்தின் மூலம் நியாயமான தீர்வு ஒன்று காணப்படவேண்டும். இன்றுள்ள நிலைமையைத் தொடர்ந்தும் சகித்துக் கொண்டிருக்க மக்கள் தயாராக இல்லை. பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும்—இவ்வாறு ஜனாப் ஹமீத் மேலும் சொன்னார்.

# அகதிகளை அனுப்புவதற்கு விதிக்கப்பட்ட தடை ரத்து!

சென்னை, ஆக. 29

இலங்கைத் தமிழ் அகதிகளை அவர்களின் தாயகத்துக்கு திருப்பி அனுப்பிவைப்பதை இடைநிறுத்தி வைக்கும்படி விடுக்கப்பட்ட உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் ரத்துச் செய்தது.

தமிழ் அகதிகள் எந்தவித நிர்ப்பந்தமும் இன்றி அவர்களின் சுயவிருப்பத்தின் பேரிலேயே அவர்களின் தாயகத்துக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர் என தமிழக மாநில அரசு சமர்ப்பித்த பதில் மனுவைத் தொடர்ந்து, தமது முந்தைய இடைக்காலத்தடை உத்தரவை உயர்நீதிமன்றம் ரத்துச் செய்துள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. ஆணையாளர் பிரதிநிதியின் முன்னிலையில், இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்ப தாங்களாகவே முன்வந்தனர் என்ற மாநில அரசின் பிரமாணப் பத்திரத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

தாயகம்திரும்ப விரும்புகின்ற அகதிகளுக்கு தேவையான தஸ்தாவேஜுகளை தமிழிலேயே கொடுக்கும்படியும் உயர்நீதிமன்றம் மாநில அரசுக்கு உத்தரவிட்டது. [உ-எ]

# கிராம அபி. சங்கங்களை புனரமைப்பதற்கு முயற்சி!

உடுவில், ஆக. 29

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கிராம அபிவிருத்தி திணைக்களம் வடக்கு-கிழக்கில் உள்ள சகல கிராம அபிவிருத்திச் சங்கங்களையும் புனரமைப்பு செய்யுமாறு கேட்டுள்ளது.

கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு இதுவரை இருந்து வந்த அதிகாரங்களைவிட தற்போது கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும்—

இதற்கமைய கிராம அபிவிருத்தி சங்க யாப்புக்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாகவும்—

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்றுநிருபத்தில் தெரிவித்துள்ளது. [உ-152]

# வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு

உடுவில், ஆக. 29

இராணுவ நடவடிக்கைகளால் பாதிப்படைந்து இடம்பெயர்ந்து மானிப்பாய், சண்டிலிப்பாய், உடுவில் பகுதிகளில் தங்கியுள்ளவர்களின் நலன்கருதி, மானிப்பாயில் இயங்கிவரும் தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலையில் விசேட வெளிநோயாளர் சிகிச்சை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. [உ-152]

ஸ்ரீ முருகன் தண்ணீர்ப் பந்தலின்
தெய்வீக இசையரங்குத் தொடரின்

இன்றைய சிறப்பு நிகழ்ச்சி

நேரம்: மாலை 7 - 00 மணிக்கு

வயலின் சோலோ

R. ராதாகிருஷ்ணன் } வயலின்
S. கோபிதாஸ் }
K. கண்ணதாஸன் — மிருதங்கம்
K. R. புண்ணியமூர்த்தி — தவில்
S. நாகராஜன் — கெஞ்சிரா
S. வேல்மாறன் — கடம்
S. ராஜா — முகர்சிங்

(22333)

# ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை தகர்க்க சதி செய்ததாக தமிழர் மீது வழக்கு

## விசாரணை 6ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஆக. 29

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனக் கட்டடத்தைத் தகர்க்கச் சதி செய்ததாக கிளிநொச்சியைச் சேர்ந்த வேந்தன் என்றழைக்கப்படும் பளை அம்பலன் என்பவர் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கின் விசாரணை அக்டோபர் 6ஆம் திகதிக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரி. பி. ஜெயசூரியாவினால் ஒத்திவைக்கப்பட்டது.

1991ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதிக்கும், 30 ஆம் திகதிக்கும் இடையில் நஜி என்பவருடன் சேர்ந்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தைத் தகர்க்கச் சதி செய்ததாக சந்தேக நபர் மீது இந்த வழக்கில் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. [உ-எ]

# செய்தியாளர் மீது தாக்கு: ஐந்து பேர் கைதாகினர்

கொழும்பு, ஆக. 29

அண்மையில் கோட்டை ரயில் நிலையத்தில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் நடத்திய அரசு எதிர்ப்பு கையெழுத்து சேகரிக்கும் இயக்கத்தின்போது பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஐந்து சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

அவர்கள் கொழும்பு நீதிமன்றத்தில் அடையாளம் காணப்படுவதற்காக நேற்று (வெள்ளி) ஆஜர் செய்யப்படவிருந்தனர்.

இத்தகவலை வாராந்த செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் வெளியிட்டார். [உ-எ]

# கால்வாய் நீர் விநியோகம் படையினரால் துண்டிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 29

மட்டக்களப்பு மாவட்டம், படுவான்கரையில் உள்ள தும்பன்கேணி என்னும் பகுதிக் கால்வாய் நீர் விநியோகத்தை இராணுவத்தினர் தடைசெய்திருக்கின்றனர்.

தும்பன்கேணி, சரவணையடியூற்று, காந்திபுரம், களுமுந்தன்வெளி, திருக்கோடை ஆகிய இடங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் இதுவரை கல் ஓயா இடது கரை வாய்க்கால் மூலம் வரும் நீரையே பயன்படுத்தி வந்தனர்.

கிணறுகளும், நீர்த்தேக்கங்களும் வற்றிவிட்ட நிலையில் இராணுவத்தினர் திட்டமிட்டு இந்த நீர் விநியோக வாய்க்காலை துண்டித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

உ
சிவசக்தி மயம்

ஆசார்யாபிஷேக அழைப்பு
(குருப்பட்டம் வழங்கல்)

நிகழும் சுவஸ்தி ஸ்ரீ ஆங்கீரச வருடம் ஆவணித் திங்கள் 14ஆம் நாள் (30-08-1992) ஞாயிற்றுக்கிழமை உத்தர நட்சத்திரம் சித்தயோகம் கூடிய காலை 6 மணி 4 நிமிடம் முதல் 6 மணி 52 நிமிடம் வரையும் நிகழும் கன்னியா லக்கின சுபமுகூர்த்தத்தில்,

அரியாலை ஸ்ரீ சித்தி விநாயக தேவஸ்தான பிரதம குரு
பிரம்ம ஸ்ரீ இ. சுப்பிரமணியக் குருக்கள்
(பிரதிஷ்டா வித்துவ ஜோதி)
அவர்களின் பெறாமகனும்
எமது ஏக புத்திரனுமாகிய

பிரம்மஸ்ரீ சபாபதி சர்மாவிற்கு
(அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் தேவஸ்தான அர்ச்சகர்)

விநாயகப் பெருமானின் இருவையும் மகாமாரி அம்பாளின் திருவருளும் கைகூட அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபையின் சார்பில் அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் ஆசார்யாபிஷேகம் நடைபெற்று. காலை 8-30 மணியளவில் அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்பாள் ஆலயத்தில் வரவேற்பு உபசாரமும் நடைபெறும்.

தீட்சாகுரு:- பிரம்மஸ்ரீ இ. சுப்பிரமணியக் குருக்கள்
(அரியாலை சித்தி விநாயகர் தேவஸ்தான பிரதம குரு)

இங்ஙனம்,
பரிபாலன சபை,
பிரப்பங்குளம் மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்,
அரியாலை.

பிரம்ம ஸ்ரீ இ. கணசர்மா தம்பதிகள்
(அரியாலை பிரப்பங்குள மகாமாரி அம்பாள்-
தேவஸ்தான பிரதம குருக்கள்)

(5283)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மேசைகள், வாங்குகள், சந்தோர் வாங்குகள், இலாச்சி மேசைகள், வீட்டுச் சோக்கேஸ், கடைச் சோக்கேஸ், அலுமாரிகள், ஜன்னல், கதவுகள், இரும்புக் கதவுகள் (கேற்) விற்பனைக்குண்டு. தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். (22332)

ஆங்கில தட்டச்சு இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R. மருதலிங்கம், இல. 8/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (22334)

### தேவை

மருந்தகத்தில் பார்முசிஸ்ட் மூலம் தொழில் பழக விரும்புவோர் 30 - 08 - 92 நேரில் வரவும். "வெஸ்கோ" 470 [250] ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [O. P. D. முன்பாக] (5274)

### மணமகன் தேவை

[7இல் நட்புச் செவ்வாய், திருவாதிரை, கிரகபாவம் 24] பெரிய ஸ்தாபனத்தில் தொழில் புரியும், 29 வயது, A/L பெண்ணுக்கு மத்திய தரத்திலுள்ளவரைப் பெற்றோர் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [22323]

### மணப்பெண் தேவை

பெரிய ஸ்தாபனத்தில் ரூபா 2,000/- பெறும் A/L படித்த, [7 இல் செவ்வாய், சதயம், கிரகபாவம் 9] 31வயது மணமகனுக்குப் பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம் [22324]

### எழுதுநர் பரீட்சை

எழுதுநர் போட்டிப் பரீட்சைத் தகுதித் தேர்வுக்கான மாதிரி வினாத்தாள் [பொது விவேகப் பயிற்சியில்] 10-9-92 வெளிவருகின்றது. ஆக்கம்: க. குணராஜா. எல்லாப் புத்தகசாலைகளிலும். கிடைக்கும். [22308]

### புலமைப்பரிசில் பரீட்சை

23 - 08 - 1992 அரசாங்கத்தால்நடத்தப்பட்ட ஆண்டு -5 [புலமைப் பரிசில்] பரீட்சை வினாத்தாள்கள் - விடைகளுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes, 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-3162]

### காணவில்லை

ஒரு வயதுடைய ஆண் பொமனேரியன் மஞ்சள் கலந்த வெள்ளை நிற நாயை 19 - 08 - 1992 முதல் காணவில்லை. கண்டுபிடித்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். அபிராமி கிளினிக், கனாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (22330)

### பிரத்தியேக வகுப்புகள்

A/L வகுப்புகளுக்கு பொருளியல், வர்த்தகம், அளவையியல், கணக்கியல், O/L வர்த்தகமும், கணக்கியலும் குறைந்த கட்டணத்தில் வீட்டிலும், நேரில் சென்றும் கற்பிக்கப்படும். தொடர்பு: இல. 858, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (5280)

### தவறிவிட்டது

நவாலி சங்கரத்தை றோட் வழுக்கை ஆற்றுப் பாதையில் எனது காது கேட்கும் கருவி (Ear Phone) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் ரூபா ஐநூறு சன்மானம் கொடுக்கப்படும். வீ. வேலுப்பிள்ளை, ஆசாமி, வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை. (22336)

### ENGLISH COURSE

English Grammar and Spoken English for all Examinations, ஒருங்கமைந்த ஆங்கிலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கிழமையில் இரண்டு நாட்கள். V. N. Kandasamy, A. I. B. (Part I) - (London) Inter (London), இல 87, திருநெல்வேலி றோட் (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில். (22335)

---

## நாடக அரங்கக் கல்லூரி

## G.A.Q 1993

நாடகமும் அரங்கவியலும் விரிவுரைகள்

06 - 09 - 1992 4-00 p. m.

ஞானக்குழந்தை இல்லம்

[ஸ்ரீதர் தியேட்டரடி] 49/5, யாழ் வீதி, யாழ்ப்பாணம். [சி-3089]

---

## C. C. A.

யாழ்ப்பாணம்,

கலந்துரையாடல்

## A/L 92

பரீட்சை எடுத்த மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் 30 — 08 — 1992 மாலை 4 மணிக்கு சந்திக்கவும்.

- நிர்வாகி.

[சி-3172]

---

அமரர் ஆலாலசுந்தரம் ஞாபகார்த்தமாக அரியாலை மத்திய வி. க. நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்

## கிரிக்கெட் போட்டி இறுதியாட்டம்

**ஷப்றா** அணி

எதிர்

**அரியாலை** அணி

அரியாலை மத்திய வி. க. மைதானத்தில் இன்று காலை 9 - 00 மணிக்கு ஆரம்பம்

பிரதம விருந்தினர்: திரு. ஆ. மகாலிங்கம் [உதவி அரசாங்க அதிபர், நல்லூர்.]

அனைவரும் திரண்டு வருக!

(சி/3096)

---

## 3ஆவது பிறந்ததின வாழ்த்து

### சாந்தகுமார் நிஷாந்த்

திருநெல்வேலி, அம்மன் வீதியைச் சேர்ந்த சாந்தகுமார், — செல்வம் தம்பதியினரின் அன்புப் புதல்வன் நிஷாந்த் இன்று 29 - 08 92 தனது 3ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, தங்கை, அப்பப்பா, அப்பம்மா, நந்தன் சித்தப்பா, அத்தைமார், மாமாமார், மச்சாள்மார், பெரியம்மா, அண்ணாமார், சந்திரா அன்ரா மற்றும் உற்றார், உறவினர் நயினை அம்பாள் அருளோடு பல்கலையும் கற்று, பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகின்றனர். [22261]

---

## கேடில்ஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம்

தென்மராட்சி.

## பதவி வெற்றிடம்

★ டீசல் இயந்திரம் திருத்துவதிலும், பராமரிப்பதிலும் அனுபவமுள்ளவர் தேவை.

★ லேத், வெல்டிங் வேலை தெரிந்தவர் விரும்பத்தக்கது.

★ தும்புத் தொழிலில் அனுபவமும், அறிவும் விசேட தகைமையாகக் கருதப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் நேரிலோ அன்றி தபால் மூலமோ எதிர்வரும் 10 - 09 - 92க்கு முன் அனுப்பி வைக்கப்படவேண்டிய முகவரி:

கேடில்ஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம்.
தலைமைக் காரியாலயம்,
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

- பொறுப்பாளர்.

(22338)

---

## பாரதிதாசன் கல்வி நிறுவனம்

## BECON Study Centre

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 93 DAY CLASSES

(ஒரு வருட வகுப்பு)

பொருளியல்: வரதராஜன் [8-00 — 9-30]

கணக்கியல்: சௌந்தி [9.30 — 11-00]

வர்த்தகம்: பசில் [11-00 — 12-00]

அளவையியல்: பிரபானந்தன் [12-00 — 1-00]

தமிழ்: அமரசிவம் [9-30 — 11-00]

இந்துநாகரிகம்: அமரசிவம் [1-00 — 2-00]

ஆரம்பம்: 01-09-1992

செவ்வாய் 8-00 a. m.

[சி-3087]

---

## எழுதுநர் பயிலுனர்களுக்கான விண்ணப்பம் கோரல்

மேற்படி பயிற்சியாளர்களுக்கான விண்ணப்பங்கள் வேலணை ப. நோ. கூ. சங்கத்தால் கோரப்படுகின்றன. சங்க எல்லைப் பரப்பில் உள்ள தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் கீழ்வரும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

தகைமைகள்:

1. க. பொ. த. (சாதாரணம்) ஒரே அமர்வில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். 5 பாடங்களில் திறமைச் சித்தி உள்ளவராகவும், தூயகணிதம் அல்லது கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம், தமிழ் மொழி ஆகிய பாடங்களில் திறமைச்சித்தி உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

   விண்ணப்ப முடிவு திகதி: 12 — 09 — 1992 சனிக்கிழமை பகல் 12 மணி.

2. வயதெல்லை: 18 முதல் 30 வரை.
3. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

பொது முகாமையாளர்,
வேலணை ப. நோ. கூ. சங்கம்,
கோணாந்தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: விண்ணப்பப் படிவங்கள் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 5/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு சங்கத் தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
வேலணை ப. நோ. கூ. சங்கம்.

[சி-3097]

---

A/L பரீட்சை எழுதிய மாணவர்களதும் ஏனையோரதும் வேண்டுகோளுக்கிணங்க

## எழுதுவினைஞர் போட்டி

பரீட்சைக்கான

## ★ விசேட பயிற்சி வகுப்புகள் ★

3ஆவது பிரிவு: ஆரம்பம்: 01-09-1992 பிற்பகல் 2மணி

பாடநெறி: மொழித்தேர்ச்சி, பொதுவிவேகம்.

★ செவ்வாய், புதன், வியாழன் — பிற்பகல் 2 — 5மணிவரை
★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ முழுப் பயிற்சிக்கும் — கட்டணம் ரூபா 300/- மட்டுமே.

## ASTAN INSTITUTE

101/10, STANLEY ROAD, JAFFNA.
[மக்கள் வங்கிக்கு அருகாமையில்]

(சி-3168)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அரசியல் தீர்வு சாத்தியமாகுமா?

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை நாடக்கூடாது. அரசியல் தீர்வே காணப்பட வேண்டும்.

இந்தக் கருத்தை இதயசுத்தியுடன் ஆதரிக்கிறார்களோ இல்லையோ, சகல தரப்பாரும், சகல அரசியல் கட்சிகளும் தமது விருப்பமும் அதே என்று கூறுகிறார்கள்.

அரசியல் தீர்வு, அரசியல் தீர்வு என்று கூறுகிறார்களே அந்த அரசியல் தீர்வுதான் என்ன? ஒவ்வொருவரும் தத்தமது நிலையில் நின்று, தமது நோக்கங்களை, இலக்குகளை எய்த வகை செய்யக்கூடிய வழிமுறைகளையே தீர்வுகளாகக் கருதுகிறார்கள்.

இனப்பிரச்சினையில் முக்கிய- பிரதான- முதலாவது இடம் வகிப்பவர்கள் தமிழர்கள். தமிழர் பிரச்சினையே இனப்பிரச்சினை. அதனால் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு தீர்வே தேவை என்பதைப் பலரும் உணர்வதாக இல்லை.

தமக்கு அரசியல் சுதந்திரம், சுயநிர்ணய உரிமை ஆகியன வேண்டும் என்பதற்காகவே தமிழர்கள் கடந்த 40 வருடங்களுக்கு மேலாகப் போராடி வருகிறார்கள்.

எனவே அவர்களைத் திருப்தி செய்யக்கூடிய ஒரு திட்டமே அவசியமானது என்பதை எவரும் உணர்வதாக இல்லை. சிங்களவர்களோ— சிங்களத் தலைவர்களோ— தமிழர்களை என்றும் தமக்கு இரண்டாந்தரப்பட்டவர்களாக வைத்திருக்கக் கூடிய ஒரு திட்டத்தையே உகந்த தீர்வாகக் கருதுகிறார்கள். முஸ்லிம்களோ தாம் சிங்களவர்களுக்குச் சமமானவர்கள் என்ற நிலையில் நின்றுகொண்டு நியாயபூர்வமாகத் தமக்குச் சேரவேண்டியதைவிட அதிகமாகப் பெற்றுவிட முந்திக்கொள்ள முனைகிறார்கள்.

முஸ்லிம்களில் கூட கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்கள் ஒரு நிலைப்பாட்டையும், தென்னிலங்கை வாழ் முஸ்லிம்கள் தமது எண்ணங்களை எய்தும் நிலைப்பாட்டையும் கொண்டிருக்கிறார்கள்.

அதனாலேயே கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் நிபந்தனையுடன் கூடிய வடக்கு-கிழக்கு இணைப்பை ஏற்கலாம் என்று கருத்துக்கூற முனைந்த மாத்திரத்தே, தெற்கில் வாழும் முஸ்லிம் தலைவர்கள் அவரை கண்டிக்கத் தொடங்கி உள்ளனர். இப்போது இணைந்திருக்கும் வடக்கு-கிழக்கில் இருந்து கிழக்கைப் பிரித்தெடுக்க வேண்டும் என்று கூட்டம் போட்டுக் கூக்குரல் எழுப்பியுள்ளனர்.

வடக்கு – கிழக்கு இணைப்பு என்ற பிரதான விடயத்திலேயே தமிழர்களின் நிலைப்பாடு ஒரு விதமாகவும், முஸ்லிம்கள், சிங்களவர்களின் நிலைப்பாடுகள் அதற்கு எதிர்மாறானவையாகவும் இருக்கும்போது அரசியல் தீர்வு எப்படிச் சாத்தியமாகப் போகிறது?

1957 ஆம் ஆண்டிலேயே வடக்கு - கிழக்கு இணைந்த பிரதேச சுயாட்சி தேவை என்ற கோரிக்கையைத் தமிழர்கள் முன்வைத்தனர். அதனை முதலில் தருவதாகக் கூறிப் பின்னர் ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார் பண்டாரநாயக்கா. தமிழருக்கு உண்டான அந்த ஏமாற்றமே தனித் தமிழீழக் கோரிக்கை எழுவதற்குக் காரணம்.

அப்படியிருக்க, வடக்கு- கிழக்கு பிரிந்து போகும் கட்டமைப்புடனான எந்தத் தீர்வையும் தமிழர்கள் ஏற்கப் போவதில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டும்.

# வடக்கு - கிழக்கைப் பிரிக்குமாறு முஸ்லிம் அமைப்புகள் வலியுறுத்து

கொழும்பு, ஆக. 29

இப்போது இணைக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கை பிரித்து; முன்னர் இருந்தது போலத் தனித்தனி மாகாணங்கள் ஆக்க வேண்டும் என்று முஸ்லிம் அமைப்புகள் பல வலியுறுத்தி உள்ளன.

அகில இலங்கைச் சோனகர் சங்கம், முஸ்லிம் தகவல் நிலையம், முஸ்லிம்களின் தேசிய அமைப்பு ஆகியன இது சம்பந்தமாகத் தனித்தனி அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் விடுத்த அறிக்கை ஒன்றில் முஸ்லிம்களுக்குத் தனிச் சபை ஒன்று அமைக்கப்படும் பட்சத்தில் வடக்கு - கிழக்கு இணைப்பை நிரந்தரமாக்கலாம் என்று தெரிவித்திருந்தார்.

அதனைக் கண்டித்து விடுத்த அறிக்கைகளிலேயே முன்கண்ட முஸ்லிம் நிறுவனங்கள் வடக்கு - கிழக்கைப் பிரிக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளன.

கடந்த சனிக்கிழமை முஸ்லிம்களின் தேசிய அமைப்பின் ஆதரவில் கொழும்பில் நடந்த கூட்டம் ஒன்றில் சபாநாயகர் எம். எச். முகம்மது, முன்னாள் அமைச்சர் கலாநிதி பதியுத்தீன் மஹமூத், அலவி மௌலானா ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

கூட்ட முடிவில், ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் —

இணைந்த வடக்கு-கிழக்கைப் பிரித்து, கிழக்கை முன்னரைப் போலத் தனி மாகாணமாக்க வேண்டும் — என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு நிரந்தர இணைப்பு நடைமுறைச் சாத்தியமற்றது என்றும், பொருளாதார ரீதியில் பாதகமானது என்றும் கூட்டத்தில் பேசிய பலரும் தெரிவித்தனர். [அ]

## நல்லூரில் இன்று

கொழும்புத்துறை, ஆக. 29

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தின் 27 ஆம் திருவிழாவான இன்று சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு வைரவர் உற்சவம் நடைபெறும்.

நல்லூர் கிழக்கு வாசல் முருகன் தண்ணீர்ப் பந்தலில் திரு. ஆர். ராதாகிருஷ்ணன் குழுவினரின் வயலின் சோலோ நடைபெறும். (இ-30)

## இன்று

வடமராட்சி, ஆக. 29

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் மூன்றாண்டுத் திட்ட மரம் நடுகைக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும். (இ-165)

★ ★ ★

தென்மராட்சி, ஆக. 29

சாவகச்சேரி லியோ கழகத்தினர் இலவச வைத்தியசேவை நிலையம் ஒன்றை சாவகச்சேரி நவீன சந்தை முன்பாக இன்று சனிக்கிழமை முதல் நடாத்தவுள்ளனர். (இ-117)

★ ★ ★

தென்மராட்சி, ஆக. 29

தென்மராட்சி உழைக்கும் பெண்கள் நிறுவனத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று கைதடி அறவழி போராட்ட குழு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (உ-117)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஆக. 29

ஈழவிடுதலைப் போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரை 8ஆம் மாதத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களை நினைவு கூரும் அஞ்சலிக் கூட்டங்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் — தமிழீழ மாவீரர் பணிமனை, வலிகாமம் கோட்டத்தில் வட்டாரீதியாக நடத்திவருகிறது. அந்த வரிசையில் தெல்லிப்பழை, உடுவில் வட்டத்தில் இன்று இரவு 7-30 மணிக்கு ஏழாலை முத்தமிழ் மன்றத்தில் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறும். (உ)

## நாளை

யாழ்ப்பாணம், ஆக. 29

இலங்கை வங்கியின் யாழ்ப்பாண மேற்தரக்கிளை ''மகளிர் பொற்கணக்கு'' அறிமுக விழாவினை நாளை பிற்பகல் 4-30 மணிக்கு நல்லூர் முருகன் ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட விசேட கருமபீடத்தில் நடாத்தவுள்ளது. இதனை யொட்டி மாலை 6 மணிக்கு இன்னிசைக் கச்சேரி ஒன்றும் நடைபெறவிருக்கிறது. (உ)

★ ★ ★

கொழும்புத்துறை, ஆக. 29

யாழ். குருநகர் சென். றோக் சனசமூகநிலையத்தின் சார்பில்நிலைய விளையாட்டு மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 7 - 00 மணிக்கு விஜயமனோகரன் இசையுரை (நாட்டுக்கூத்து) இறை அடிகள் திரு. என். ஏச். ஜெபநேசன் தலைமையில் நடைபெறும். (உ-10)

# மாதகல் சமரில் வீரமரணமடைந்தோர்

யாழ்ப்பாணம், ஆக. 29

மாதகல் பகுதியில் நேற்று முன் தினம் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் நடைபெற்ற சண்டையில் விடுதலைப் புலிகள் தரப்பில் லெப்டினன்ட் கேர்ணல் ராஜன் உட்பட ஒன்பது போராளிகள் வீரமரணமடைந்தனர். அவர்களின் விவரம் வருமாறு:-

★ முன்னாள் யாழ் மாவட்டத் தளபதியும், சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப் பிரிவின் சிறப்புத் தளபதியும், அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியின் பொறுப்பாளருமான லெப்டினன்ட் கேர்ணல் ராஜன் (சோமசுந்தரம் சற்குணம் — மாதகல்)

★ கப்டன் கணேசன் (புண்ணியமூர்த்தி ரகு — கந்தளாய்)

★ கப்டன் வன்னியன் (கணபதிப்பிள்ளை கணநாதன் - துணுக்காய்)

★ லெப்டினன்ட் தயாபரன் (பார்த்தீபன் — சிவசுப்பிரமணியம் சிவசொரூபன் - மல்லாவி)

★ லெப்டினன்ட் அருளையன் (பிரதீப் — சாமித்தம்பி மகிந்தன் - வாழைச்சேனை)

★ 2 ஆம் லெப்டினன்ட் இளங்கோ (யோகராஜா — பாஸ்கரன் பிரபாகரன் - தையிட்டி)

★ வீரவேங்கை கலைச்செல்வன் (குகன் — இருதயநாதன் புனிதராஜா - பருத்தித்துறை)

★ வீரவேங்கை அறிவழகன் (நாகலிங்கம் சிவகுமார்- குப்பிளான்)

★ வீரவேங்கை மதியழகன் (நடராஜா பூலிங்கம்- மாங்குளம்). (உ)

## பொலோ மி பரீட்சை இன்று

யாழ்ப்பாணம், ஆக. 29

இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள (Follow me) தரம் ஒன்று, தரம் இரண்டு பரீட்சைக்கான வினாத்தாள்களும் அனுமதி அட்டைகளும் நேற்று இங்கு எடுத்து வரப்பட்டுள்ளன. அதனை அடுத்துப் பரீட்சை இன்று திட்டமிட்டபடி நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகள் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் உள்ள பரீட்சை மண்டபத்தில் இன்று தமது அனுமதி அட்டைகளைப் பெற்றுப் பரீட்சைக்கு உடன் தோற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் —

பரீட்சை முடிந்த பின்னர் பரீட்சார்த்திகள் தத்தமது ஒப்பங்களை தகுதி வாய்ந்த அதிகாரிகளைக் கொண்டு உறுதி செய்துகொள்ளுமாறும் யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகள் தங்கள் அடையாள அட்டைகளை பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (ஒ-5-162)

## செஞ்சிலுவை தேர்தல்

''திட்டமிட்டபடி செஞ்சிலுவைச் சங்கத்தின் சகல பிரிவுகளுக்குமான வருடாந்தப் பொதுக் கூட்டங்களும் அதையொட்டிய தேர்தல்களும் — ஏற்கனவே விளம்பரப்படுத்தப்பட்ட — இடங்களில் இடம்பெறும்; தகைமையுள்ள அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது தத்தமது பிரிவுக் கூட்டங்களுக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்''

—இவ்வாறு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளை தலைமையகத்தின் இடைக்கால நிர்வாகத் தலைவரின் சார்பில் கேட்கப்பட்டுள்ளது. (உ)

## உற்சவம்

யாழ்ப்பாணம், ஆக. 29

கொக்குவில் கிழக்கு ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயத்தில் நாளை காலை 4.30 மணி முதல் கும்பாபிஷேக நிகழ்ச்சி நடைபெறும்.

## செஞ்சோலை இசைமாலை

செஞ்சோலை இசைமாலை நிகழ்ச்சி இன்று கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்திலும் நாளை மானிப்பாய் மாவீரர் கலையரங்கத்திலும் இரவு 7.30 மணி முதல் நடைபெறும். (உ)

## ஒத்திவைப்பு

அரியாலைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சாம்சன், மணியரசன், டயஸ் ஆகிய மூன்று வீடமைப்புத் திட்டங்கள் இணைந்து இன்றும் நாளையும் நடத்தவிருந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 12, 13 ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய ஆட்டங்கள்

யாழ். மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையம் அமரர் சிற்றம்பலம் பஞ்சலிங்கம் ஞாபகார்த்தமாக நடத்தும் 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் அரை இறுதி ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ றோயல் வி. க. எதிர் கொய்யாத்தோட்டம் வி. க. அணி.

★ சென். அன்ரனிஸ் வி. க. அணி எதிர் குருநகர் பாடும் மீன் வி. க. அணி.

★ ★ ★

கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் இன்று திருமலை நட்சத்திரங்கள் வி. க. அணியை எதிர்த்து யங். றோயல் வி. க. அணி மோதும். (உ-த)

## நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஆக. 29

உடுவில் சுகாதாரப் பகுதியில் வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவிருக்கின்றன அது பற்றிய விவரம் வருமாறு:-

**செவ்வாயன்று**

காலை 8.30 — 10.00 மணி:- தாவடி காளி கோவிலடி.

காலை 10.30 — நண்பகல் 12 மணி:- தாவடி ஆரம்ப சுகாதார நிலையம்.

பிற்பகல் 1.30 — 3 மணி:- இணுவில் சைவப்பிரகாச பாடசாலை.

**புதனன்று**

காலை 8 மணி — 10 மணி:- இணுவில் பரமானந்த வாசிகசாலை.

காலை 10.30 — நண்பகல் 12 மணி:- இணுவில் புளிசிட்டி கிராம வாசிகசாலை.

பிற்பகல் 1.30 — 3 மணி:- இணுவில் சிவகாமி அம்மன் கோவிலடி. (உ-68)

## திலீபன் நினைவு தடகள விழா

யாழ்ப்பாணம், ஆக. 29

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவினரால் நடத்தப்படும் தியாகி திலீபன் நினைவுக் கேடயத்திற்கான தடகள விளையாட்டு விழா திட்டமிட்டபடி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஆண்கள், பெண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும் என்றும் —

நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6 மணிக்கு ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி கோண்டாவில் மாவட்ட செயலக முன்றலில் இருந்து ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளுக்காக விண்ணப்பித்த போட்டியாளர்கள் அனைவரும் குறித்த நேரத்திற்கு முன்னர் ஆரம்ப இடத்திற்கு சமூகமளிக்கும்படி கேட்கப்படுகின்றனர். (ஒ)

## காவல்துறை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த இருபத்தி ஐந்து தினங்களாக நடைபெற்ற உற்சவ தினங்களின்போது தமிழீழ காவல் துறையுடன் இணைந்த, அடியார்கள், அன்பர்கள் அனைவரின் நலன்களைப் பாதுகாப்பதிலும் வீதி ஒழுங்குகளைப் பேணுவதிலும், இரவு பகலாக பணிபுரிந்த சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர், சாரணர்கள், யாழ். மாநகரசபை ஊழியர்கள் மற்றும் ஏனைய தொண்டர் ஸ்தாபனங்கள். அனைவருக்கும் தமிழீழ காவல் துறையின் சார்பில் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ)

## இராணுவக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன.

அதிகாலை 1.30 மணியளவில் காவலரண்களுக்குள் புகுந்த புலிகள் அதிகாலை 3 மணிவரை கைப்பற்றப்பட்ட காவலரண்களுக்குள் நிலை கொண்டிருந்தனர்.

காவலரண்களை விட்டு வெளியேறும் சமயம் புலிகள் அவற்றை நிர்மூலமாக்கினர்.

காயமடைந்த இராணுவத்தினரும், ஏனையோரும் பிரதான முகாமை நோக்கி தப்பி ஓடிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

ஆனையிறவு பெரியபச்சிலைப்பள்ளிப் பகுதியில் ஆயுதப் படையினரின் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலைவேளை நடத்திய தாக்குதலில், ஐந்து படையினர் கொல்லப்பட்டனர் மற்றும் ஐவர் காயமடைந்தனர் என்று கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ-எ-3-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராளிகளின்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஊர்தியும். வெற்றிலைக் கேணியில் நேற்று வீரமரணமடைந்த லெப். தொல்காப்பியனின் புகழுடலும் கோப்பாய் கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நடைபெறும்.

அஞ்சலி கூட்டத்தையடுத்து ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு மாவீரனின் புகழுடல் புதைகுழியில் விதைக்கப்படும். உருவப்படங்களுக்குரிய மாவீரர்களின் நினைவுக்கற்கள் நடப்படும்.

### தென்மராட்சியில்

நேற்று வெற்றிலைக்கேணியில் வீரமரணமடைந்த லெப். மன்றவாணன். வீரவேங்கை சோமகன் ஆகியோரது புகழுடம்புகளும், உருவப் படங்கள் தாங்கிய ஊர்தியும் பிற்பகல் 4 மணிக்கு மீசாலை தெற்கு விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படுமும். பின்னர் மாவீரர்களின் புகழுடம்புகள் கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் விதைக்கப்படும்.

### வடமராட்சியில்

மாவீரர்களின் உருவப்படங்கள் தாங்கிய ஊர்தி வீதிகள் வழியாக அஞ்சலிக்காக பவனி வந்து பருத்தித்துறையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெறும்.

(இ-3)

## சந்திப்பு

யாழ்ப்பாணம், ஆக. 29

யாழ். மாவட்டத்திலும் குறிப்பாக வெளிமாவட்டத்திலும் புதிதாக பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளோரை தமிழ்க் கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் சந்திக்க உள்ளனர்.

இச்சந்திப்பு நாளை ஞாயிறு காலை 10.00 மணிக்கு யாழ். கல்வித் திணைக்கள வளாகத்தில் உள்ள நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறும்.

(இ)

## ரொக்சட் தாக்குதலுக்கு இலக்காகி
# காபூலில ரஷ்ய விமானம் வெடித்துச் சிதறியது!

காபூல், ஆக. 29

காபூல் விமான நிலையத்தில் தரித்து நின்ற ரஷ்யாவின் 'ஏரோபுளோட்' இராணுவப் போக்குவரத்து விமானம் ஒன்று முஜாஹிதின் கெரில்லாக்களின் ரொக்கட் தாக்குதலுக்கு இலக்காகி வெடித்துச் சிதறியதாக அறிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் உள்ள ரஷ்ய ராஜதந்திரிகளை தலைநகர் காபூலில் இருந்து மாஸ்கோவுக்கு அழைத்து வருவதற்காக ரஷ்ய அரசு அந்த விமானத்தை அனுப்பியிருந்தது.

(ஒ-எ)

## துக்கம்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

லும் தோரணங்கள், வாழைகள், கறுப்புக்கொடிகள் கட்டி மக்கள் துக்கம் கொண்டாடினர்.

பல இடங்களில் சந்திகளில் சோக இசை ஒலிபரப்பப்பட்டது.

கடைகளிலும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

(இ-3)

# உயர்தர விசேட பரீட்சை...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

களின் படி யாழ். நகரப் பாடசாலைகளில் வேம்படி மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, கனகரத்தினம் மகாவித்தியாலயம் ஆகிய மூன்று கல்லூரிகளில் மட்டும் ஒவ்வொரு மாணவர் நான்கு பாடங்களிலும் "ஏ" சித்தி பெற்றுள்ளனர்.

பாடசாலைகள் பெற்ற சிறந்த பெறுபேறுகள் வருமாறு:-

**நெல்லியடி ம. ம. வி.**
★ கணிதம்: 2ஏ2பி, ஏ2பிசி.
★ வர்த்தகம்: ஏ3பி. ஏபி2சி (இருவர்)
★ கலை: 3ஏசி

**கரவெட்டி விக்னேஸ்வரா**
★ வர்த்தகம்; 2ஏபிசி (இருவர்), ஏ2பிசி

**கரவெட்டி ஞானாசிரியார்**
★ வர்த்தகம்; ஏ3பி, ஏ2பிசி

**உடுப்பிட்டி அமெரிக்க மிஷன்**
★ கணிதம்: ஏபி2சி
★ வர்த்தகம்: ஏபி2சி

**சிதம்பரா**
★ கணிதம்: ஏசி2எஸ்

**வேலாயுதம் ம. வி.**
★ கணிதம்: ஏ3எஸ்

**வட இந்து மகளிர்**
★ கணிதம்: ஏபி2எஸ், ஏபிசிஎஸ், ஏ3சி
★ வர்த்தகம்: ஏ2பிசி, ஏபி2சி, ஏபிசிஎஸ்
★ மருத்துவம்: பி2சிஎஸ்

**ஹாட்லி**
★ கணிதம்: 3ஏபி, 2ஏ2பி, 2ஏபிசி, 2ஏ2சி, ஏ2பிசி (இருவர்), ஏ2பிசி ஏபி2சி (இருவர்), ஏ3சி ஏபிசிஎஸ்
★ மருத்துவம்: 4பி, 3பிசி (இருவர்), 2பி2சி (இருவர்)
★ வர்த்தகம்: ஏபி2சி, ஏபிசிஎஸ்

**உடுத்துறை ம. வி.**
★ கலை: ஏ3சி, 2பி2சி

**உடுப்பிட்டி மகளிர்**
★ கலை: ஏபி2சி
★ வர்த்தகம்: ஏபி2சி
★ மருத்துவம்: 2பிசி

**பருத்தித்துறை மெதடிஸ்**
★ கணிதம்: ஏபி2சி (இருவர்), ஏ3சி (நால்வர்)
★ மருத்துவம்: ஏபி2சி, பி3சி (இருவர்), பி2சிஎஸ்
★ வர்த்தகம்: 2ஏபிசி, ஏபிசிஎஸ், பி3சி, பிசி2எஸ்

**கனகரெத்தினம் ம. ம. வி.**
★ வர்த்தகம்: பாலசிங்கம் பகீரதன் – 4ஏ மற்றும் 2ஏபிசி (மூவர்)

**மத்திய கல்லூரி**
★ கணிதம்: ஏ2சிஎஸ், பி2சிஎஸ்
★ மருத்துவம்: 2பி2சி, பி2சிஎஸ்
★ வர்த்தகம்: ஏ2பிசி, ஏபி2சி, 3பிசி, 2பி2சி, பி3சி

**சென். பற்றிக்ஸ்**
★ கணிதம்: 2ஏபிசி, ஏபி2சி, ஏபிசிஎஸ்
★ மருத்துவம்: பி3சி (இருவர்), 4சி
★ வர்த்தகம்: 2ஏபிசி, ஏ2பிசி, ஏபிசிஎஸ்
கலை: ஏசி2எஸ்

**வேம்படி மகளிர்**
★ கணிதம்: உலகப்பிரகாசம் வதனி 4ஏ மற்றும் 2ஏ2பி, ஏபி2சி, ஏ2சிஎஸ் (இருவர்), ஏபிசிஎஸ் (இருவர்)
★ மருத்துவம்: ஏபி2சி, 3பிசி, 2பி2சி (நால்வர்)
★ வர்த்தகம்: 2ஏ2பி (இருவர்), 2ஏபிஎஸ், ஏ3பி ஏ2பிசி [இருவர்], ஏபி2சி, ஏசி2எஸ்
★ கலை: ஏ2பிசி [இருவர்] ஏ3பி

**சுண்டுக்குளி மகளிர்**
★ கணிதம்: ஏபி2எஸ்
★ மருத்துவம்: ஏ3பி, 4பி 3பிசி.
★ வர்த்தகம்: தாரகா டானியல் 4ஏ மற்றும் 2ஏ2பி, 3ஏபி.
★ கலை: 2ஏபிசி

**யாழ். இந்து**
★ கணிதம்: 2ஏ2பி. 2ஏபிசி (மூவர்) ஏ2பிசி (மூவர்). ஏபி2சி (மூவர்), ஏபிசிஎஸ் (ஐவர்), ஏ3சி. ஏ2சிஎஸ் (மூவர்) ஏ3எஸ் (இருவர்)
★ மருத்துவம்: 2ஏ2பி, ஏ2பிசி (இருவர்), ஏபி2சி, ஏபிசிஎஸ், ஏ3சி.
★ வர்த்தகம்: 2ஏ2பி, 2ஏபிசி ஏ3பி (இருவர்), ஏபிசிஎஸ், ஏ3சி.

**கொககுவில் இந்து**
★ கணிதம்: 2ஏபிசி, ஏபி2சி (இருவர்), ஏபிசிஎஸ் (இருவர்), ஏ3சி (இருவர்), ஏ2சிஎஸ், ஏசி2எஸ், ஏ3எஸ் (இருவர்).
★ வர்த்தகம்: 3ஏசி, 2ஏ2பி, 2ஏபிசி (இருவர்), 2ஏசிஎஸ், ஏ2பிசி (இருவர்), ஏபி2சி (ஐவர்), ஏ3சி (இருவர்) 2சிஎஸ்
★ கலை: 2ஏபிசி, ஏபிசிஎஸ், ஏ3சி, ஏசி2எஸ்.

**யாழ் இந்து மகளிர்**
★ உயிரியல்; ஏ2பிசி, ஏ3சி (இருவர்), 2பிசிஎஸ், பி3சி (நால்வர்), பி2சிஎஸ் (மூவர்).
★ வர்த்தகம்: 2ஏ2பி, ஏ3பி, ஏ2பிசி (இருவர்), ஏ2பிஎஸ், ஏபி2எஸ், (இருவர்), ஏபிசிஸ், ஏ3சி (இருவர்). ஏ2எசிஸ் (மூவர்).
★ கலை: 2ஏபிசி, 2ஏபிஎஸ், ஏ2பிசி, ஏ2பிஎஸ், ஏ2சிஎஸ்.

**யா. கன்னியர் மடம் ஆங்கில பாடசாலை**
★ கணிதம்: 2ஏ2சி.
★ மருத்துவம்: ஏ3சி, ஏபி2சி, பி2சிஎஸ்.
★ வர்த்தகம்: ஏ3பி (இருவர், ஏ2பிசி, ஏபி2சி, 3பிசி.

**சென் ஜோன்ஸ்**
★ கணிதம்: ஏபி2சி (இருவர்), ஏபிசிஎஸ், ஏ2சிஎஸ், ஏ3சி, ஏ3எஸ்.
★ மருத்துவம்: ஏ2பிசி, ஏபி2சி.
★ வர்த்தகம்: 2பி2சி.

**சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி ம. வி**
★ வர்த்தகம்: 3ஏபி.

**ஸ்கந்தா**
★ கணிதம்: ஏ2சிஎஸ் (இருவர்).
★ வர்த்தகம்: 2ஏ2பி.
★ கலை: ஏபிசிஎஸ்.

**இராமநாதன் கல்லூரி**
★ மருத்துவம்: 2ஏபிஎஸ்.
★ வர்த்தகம்: பி3சி,
★ கலை: 3பிசி.

**உடுவில் மகளிர்**
★ கணிதம்: ஏபி2சி.
★ மருத்துவம்: பி2சிஎஸ் (இருவர்).
★ வர்த்தகம்: 2ஏ2பி.
★ கலை: 2பி2சி.

**மானிப்பாய் இந்து**
★ வர்த்தகம்: 2ஏ2பி;
★ கணிதம்: ஏ2சிஎஸ்.
★ மருத்துவம் ஏ2பிசி
★ கலை: ஏ2பிசி.

**யாழ்ப்பாணக் கல்லூரி**
★ கணிதம்: ஏசி2எஸ் (மூவர்)
★ கலை: ஏபிசிஎஸ் (இருவர்)
★ வர்த்தகம்: ஏபி2சி (இருவர்)

**மானிப்பாய் மகளிர்**
★ வர்த்தகம்: ஏ3பி
★ கலை: 2ஏபிசி
★ கணிதம்: பி3எஸ்
★ மருத்துவம்: 3சிஎஸ்

**மகாஜனா**
★ கணிதம்: 3ஏபி, ஏ2பிசி
★ கலை: 3ஏபி. 2ஏ2பி
★ வர்த்தகம்: 3பிசி, ஏ3சி, ஏ2பிசி, 2ஏ2சி
★ மருத்துவம்: பி2சிஎஸ், 3சிஎஸ்

**யூனியன்**
★ வர்த்தகம்: 2ஏ2பி

**வயாவிளான் ம. ம. வி.**
★ வர்த்தகம்: 2ஏ2பி, ஏபி2சி
★ கலை: 2ஏபி (நான்காம் பாட முடிவு வெளிவரவில்லை)

**அத்தியார் இந்து**
★ வர்த்தகம்: பி2சிஎஸ்
★ கலை: 4சி

**அச்சுவேலி ம. வி.**
★ வர்த்தகம்: ஏ2பிசி

**இடைக்காடு ம. வி.**
★ விஞ்ஞானம்: ஏ3சி
★ வர்த்தகம்: 2ஏபிசி
★ கலை: ஏ2பிசி

**அச்சுவேலி சென். திரேஸா**
★ கலை: 2பி2சி, ஏசி2எஸ்

**புத்தூர் சோமஸ்கந்தா**
★ மருத்துவம்: ஏ2சி
★ வர்த்தகம்: 2பிசிஎஸ்
★ கலை: 3சிஎஸ்

**அருணோதயா**
★ வர்த்தகம்: ஏபி2சி

**வட்டு இந்து**
★ வர்த்தகம்: ஏபி2சி
★ கலை: ஏ3சி
★ கணிதம்: ஏபி2சி
★ மருத்துவம்: 3பிசி

**பண்டத்தரிப்பு மகளிர்**
★ வர்த்தகம்: ஏபி2சி, ஏ2பிசி (இருவர்),
★ கணிதம்: ஏ2சிஎஸ்.

**சென் ஹென்றீஸ்**
★ கணிதம்: 2பி2சி.
வர்தகம்: 2ஏபிசி (இருவர்), ஏ2பிசி.

**விமன்காமம் ம. வி**
★ கலை: 2பிசிஎஸ்.

**மல்லாகம் ம.வி.**
★ வர்த்தகம்; ஏ2பிசி

**இளவாலை கன்னியர் மடம்**
★ வர்த்தகம்: ஏபிசிஎஸ், ஏ3சி

**யாழ்ற்றன் கல்லூரி**
★ வர்த்தகம்: ஏபி2சி, 2பி2சி, பி2சிஎஸ்
★ கலை: பி3சி, பி2சிஎஸ், பி2சிஎஸ்,

# மரண அறிவித்தல்கள்

## தங்கம்மா அம்பலவாணர்

[சண்டிலிப்பாய்]

தங்கம்மா காலமானார். இவர் காலஞ்சென்ற அம்பலவாணரின் மனைவியும், காலஞ்சென்ற இரத்திவாம்பாளின் தாயாரும், பத்மாவதியின் வளர்ப்புத் தாயாரும், காலஞ்சென்ற தம்பு, கற்பகம், கனகரத்தினம் மற்றும் ஐயாத்துரையின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [29 - 8 - 92] காலை 8.30 மணிக்கு டச்சு வீதியில் உள்ள வீட்டில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சுந்தரலிங்கம்

கனகரத்தினம் ஒழுங்கை,
சண்டிலிப்பாய், [23341]

## சின்னத்தம்பு சந்திரசேகரம்

[பன்னாலை]

பன்னாலையைச் சேர்ந்த சின்னத்தம்பு சந்திரசேகரம் 28-08-92 இல் காலமானார்.

இவர் தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்ற நன்னிக்குட்டி சின்னத்தம்பு - சீவாம்பிகை தம்பதிகளின் புதல்வரும். பன்னாலையைச் சேர்ந்த சரவணமுத்து வள்ளியம்மை தம்பதிகளின் மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், துஷ்யந்தன் [பிரான்ஸ்], ஜெயந்தன், சந்திரகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-08 92 இல் சுன்னாகம் காங்கேசன்துறை வீதியிலுள்ள கப்பல் வளவில் [N S B அருகில்] நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சிவபாக்கியம்
(மனைவி)

[4955]

## செல்வி சண்முகலிங்கம் கார்த்தியாயினி [குழலி]

சுருவிலைப் பிறப்பிடமாகவும், கொழும்பில் வசித்து வந்தவருமான செல்வி சண்முகலிங்கம் கார்த்தியாயினி [குழலி] 27-08-92 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சண்முகலிங்கம், பரமேஸ்வரியின் அன்பு மகளும், புனிதநாதன் (பகீரதன், ஜேர்மனி], குகதரன் (கொழும்பு), காலஞ்சென்ற குகாயினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுப்பையா, மகேஸ்வரி அவர்களது அன்பு மருமகளும், குமாரசாமி. புவனேஸ்வரி, கிருஷ்ணபிள்ளை, காலஞ்சென்ற சிவரெத்தினம் மற்றும் கமலம் [லண்டன்], சோபசுந்தரம், காலஞ்சென்ற செல்லம்மா, ஏகாம்பரம். இராசம்மா வைத்திலிங்கம், மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புப் பெறாமகளுமாவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
30, 2ம் குறுக்குத்தெரு, சி. வைத்திலிங்கம்
யாழ்ப்பாணம். [22339]

# அறிவித்தல்

## 2ஆம் லெப். இளங்கோ

27-08-92 அன்று மாதகல் பகுதியில் நடைபெற்ற நேரடி மோதலில் 2ஆம் லெப். இளங்கோ / யோகராசா (பாஸ்கரன் பிரபாகரன் - தையிட்டி, காங்கேசன்துறை. தற்போது கைதடி கிழக்கு) வீரச்சாவு எய்திவிட்டார் என்பதனை வலி. கிழக்கு பிரதேச சபையின் உப அலுவலகங்களான மயிலிட்டி, மல்லாகம், தெல்லிப்பளை, காங்கேசன்துறை ஆகியவற்றைச் சேர்ந்த ஊழியர்களுக்கும், உற்றார், உறவினர்களுக்கும் இத்தகவல் அறியத்தரப்படுகிறது.

[ஈ/119]

— குடும்பத்தினர்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org